விஜயபாரதம்
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, ஆடி - 19 புதன் 04.08.2021 மலர் - 2, இதழ் - 120

# தமிழகத்தை பிரிக்கும் திட்டம் இல்லை


விஜயபாரதம்

தி.மு.க பதவி ஏற்றது முதல் மத்திய அரசை ஒன்றிய அரசு என அழைப்பதை வாடிக்கையாகக் கொண்டுள்ளது. இது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. இதனை குறித்து கேள்வி எழுப்பியபோது அப்படிதான் சொல்வோம் என திமிராகவும் கூறியது தி.மு.க. இந்நிலையில், பா.ஜ.கவை சேர்ந்த எல்.முருகன் சமீபத்தில் மத்திய இணை அமைச்சராக பதவி ஏற்றபோது, தனது சமூக ஊடகப் பதிவில் 'கொங்கு நாடு' என்று குறிப்பிட்டார். இது பெரிய பரபரப்பை ஏற்படுத்தியது. கொங்கு மண்டலத்தில் உள்ள கோவை, திருப்பூர், ஈரோடு, நாமக்கல், சேலம், தர்மபுரி, நீலகிரி, கரூர், கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களை பிரித்து தனி யூனியன் பிரதேசமாக அறிவிக்க திட்டமிடப்படுவதாக தகவல்கள் வெளியானது. தமிழகத்தை பிரிக்க சதி என தி.மு.க புலம்பித் தள்ளியது. அப்பதிவு 'ஒரு அச்சுப்பிழை' என எல். முருகன் கூறிய பிறகே சமாதானமானது. இது தொடர்பாக மக்களவையில் எம்.பி.,க்கள் பாரிவேந்தர், ராமலிங்கம் ஆகியோர் கேள்வி எழுப்பினர். இதற்கு உள்துறை இணையமைச்சர் நித்யானந்த ராய் அளித்த பதிலில், 'தமிழகத்தை இரண்டாக பிரிக்க எந்த கோரிக்கையும் வரவில்லை. அதுபோல், எந்த கோரிக்கையும் பரிசீலனையில் இல்லை' என்று கூறியுள்ளார்.

# கோவேக்சின் அபாரம்


விஜயபாரதம்

கோவேக்சின் தடுப்பூசி குறித்து ஆய்வு செய்த அமெரிக்காவின் தேசிய சுகாதார நிறுவனம் (என்.ஐ.எச்.) வெளியிட்டுள்ள அறிவிப்பில், 'கோவேக்சின் தடுப்பூசி செலுத்திக் கொண்ட வர்களிடம் இருந்து ரத்த சீரம் மாதிரிகளைப் பெற்று 2 ஆய்வுகள் நடத்தப்பட்டன. அதன் முடிவுகள் இந்த தடுப்பூசி நோய் எதிர்ப்பு பொருளை உருவாக்குகிறது. ஆல்பா மற்றும் டெல்டா வகை வைரஸ்களுக்கு எதிராக செயல்படுகிறது. கோவேக்சின் 'சார்ஸ் கோவ் 2' வைரசின் முடக்கப்பட்ட வடிவத்தைக் கொண்டுள்ளது. அதனால் இதை நகல் எடுக்க முடியாது. ஆனால் வைரசுக்கு எதிராக நோயெதிர்ப்பு பொருளை உருவாக்க நோய் எதிர்ப்பு மண்டலத்தை தூண்டுகிறது. இந்த தடுப்பூசி பாதுகாப்பானது. இந்த தடுப்பூசியின் வெளியிடப்படாத 3வது கட்ட மருத்துவ பரிசோதனை முடிவுகள், இது நோய்க்கு எதிராக 78 சதவீத செயல்திறனை கொண்டுள்ளது. மருத்துவமனையில் சேர்ப்பது உள்ளிட்ட கடுமையான கொரோனா வைரஸ் தொற்றுக்கு எதிராக 100 சதவீத செயல்திறனை கொண்டுள்ளது' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சேவைத்துளி



**கோவை சேவாபாரதி சார்பில் புதிய ஆம்புலன்ஸ் சேவை துவக்க விழா நடைபெற்றது.**

# பி.எம்.கேர்ஸ்




விஜயபாரதம்

**கொ**ரோனா தொற்றால், பெற்றோர் இருவரும் அல்லது சட்டப்பூர்வ காப்பாளர் அல்லது தத்தெடுத்த பெற்றோர் இருவரும் இறந்துவிட்ட குழந்தைகளுக்கு உதவும் வகையிலான பி.எம். கேர்ஸ் திட்டத்தை பிரதமர் மோடி கடந்த மே 29ம் தேதி தொடங்கி வைத்தார். இத்திட்டம் கடந்த ஜூலை 15 முதல் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் பெற்றோரை, காப்பாளரை இழந்த குழந்தைகளுக்கு உண்டு உறைவிடப் பள்ளியில் இலவச படிப்பு, மருத்துவ காப்பீடு உள்ளிட்ட முழுமையான அக்கறை யுடன் 23 வயதுவரை நீண்ட காலம் பாதுகாப்பை பெறவும், தற்சார்பு நிலையை அடையவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் கீழ் குழந்தைகள் உதவிபெற https://pmcaresforchildren.in/ என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம் என, பெண்கள் மற்றும் குழந்தைகள் நல அமைச்சகம் தெரிவித்து உள்ளது. இதற்கு தகுதி உடைய குழந்தைகளை, பொதுமக்களும் மேற்கண்ட இணையதளத்தில் சிபாரிசு செய்யலாம் என கூறப்பட்டுள்ளது.

# போலி பல்கலைக்கழகங்கள்



விஜயபாரதம்

**ம**த்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் மக்களவையில் எழுத்து மூலம் அளித்துள்ள பதிலில், 'யு.ஜி.சி'யின் அனுமதி பெறாமல் 24 பல்கலைக் கழகங்கள் இயங்கி வருகின்றன. இரண்டு பல்கலைக் கழகங்கள் தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் உள்ளது. உத்தர பிரதேசத்தில் எட்டு, டெல்லியில் ஏழு, ஒடிசா மற்றும் மேற்கு வங்காளத்தில் தலா இரண்டு, புதுச்சேரி உட்பட ஐந்து மாநிலங்களில் தலா ஒரு போலி பல்கலைக் கழகங்கள் உள்ளன. இவற்றின் மீது உரிய நடவடிக்கை எடுக்க மாநில அரசுகளுக்கு அறிவுறுத்தப்பட்டு உள்ளது என தெரிவித்தார்.



விஜயபாரதம்

# புதுவை சிறக்கும்

புதுச்சேரியில் 75வது சுதந்திர தினத் திருநாளை முன்னிட்டு புதுச்சேரி அரசு சார்பில் 'ஆசாதி கா அம்ரித் மஹோத்சவ்' என்னும் 75,000 ஆயிரம் மரக்கன்றுகள் நடும் நிகழ்வின் தொடக்க விழா பாகூர் கொம்யூனில் உள்ள மணப்பட்டு கிராமத்தில் இன்று நடைபெற்றது. அதில் பங்கேற்ற புதுச்சேரி துணைநிலை ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன், 'ஆடிப்பெருக்கில் மரம் நடுவிழா நடக்க வேண்டும் என்று விரும்பினேன். அதன்படி மரம் நட்டுள்ளோம். காலியிடங்களில் மரம் நடுவதுடன், அரசு காலிப் பணியிடங்களையும் நிரப்புவோம். புதுச்சேரியை முன்பைப்போல பசுமையாக்க வேண்டும்' என்றார். இந்நிகழ்வில் பேசிய புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி, 'இன்னும் லட்சக்கணக்கான மரக்கன்றுகளை நட்டு பசுமையான புதுச்சேரியை உருவாக்குவோம். சிறந்த சுற்றுலாத் தலமாக மாற்றும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். பாதிப்பு ஏற்படாத வகையில் மீன்பிடித் துறைமுகம் திட்டத்தை செயல்படுத்துவோம். தனியார் தொழிற்சாலைகள் வர நல்ல சூழலை அரசு உருவாக்கும். ஆளுநர் ஒத்துழைப்புடன் புதுச் சேரியைச் சிறந்த மாநிலமாக்குவோம்' என்று குறிப்பிட்டார்.

# கொரோனாவுக்கு அஸ்வகந்தா



விஜயபாரதம்

உடல் சக்தியை அதிகரிக்க, மன அழுத்தம் குறைக்க, நோய் எதிர்ப்பு சக்தியை பெருக்க என பல்வேறு வகைகளில் ஆயுர்வேத சிகிச்சையில், 'அஸ்வகந்தா' என்ற மூலிகை கலந்த மருந்துகள் தரப்படுகின்றன. சித்த மருத்துவத்தில் இது 'அமுக்கிரா' என அழைக்கப்படுகிறது. கொரோனாவுக்கு எதிரான சிகிச்சையின் போதும் பல இடங்களில் அஸ்வகந்தா அளிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் கொரோனாவுக்கு எதிராக அஸ்வகந்தா எவ்வாறு செயல்படுகிறது என்பது குறித்து ஆய்வு செய்ய மத்திய அரசின் ஆயுஷ் அமைச்சகம் திட்டமிட்டுள்ளது. இதற்காக மத்திய அரசின் ஆயுஷ் அமைச்சகம், பிரிட்டனின் லண்டனில் உள்ள சுகாதாரம் மற்றும் வெப்பமண்டல மருத்துவ பள்ளியுடன் ஒப்பந்தம் செய்துள்ளது. லண்டன், லீசெஸ்டர், பிர்மிங்ஹாம் என பல பகுதிகளில் 2 ஆயிரம் பேரிடம் இந்த பரிசோதனைகள் விரைவில் துவங்க உள்ளது.




விஜயபாரதம்

# வீழ்வேன் என்று நினைத்தாயோ?

டோக்கியோவில் நடைபெற்று வரும் ஒலிம்பிக்கில் 1500 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் நெதர்லாந்து வீராங்கனை சிஃபான் ஹசன் என்பவர் ஓடினார். அப்போது அவர் திடீரென மற்றொரு வீராங்கனையுடன் மோதி தடுமாறி கீழே விழுந்தார். இருப்பினும், மனம் தளராமல் மீண்டும் எழுந்து இலக்கை நோக்கி வேகமாக ஓடிச்சென்று தங்கம் வென்று அனைவரையும் ஆச்சர்யப்படுத்தியுள்ளார். அந்த வீராங்கனைக்கு பாராட்டுக்கள் குவிந்து வருகிறது.

# என்.டி.டி.வியின் போலித்தனம்



விஜயபாரதம்

போலி செய்திகளை வெளியிடுவதிலும், உண்மையை திரித்துக் கூறுவதிலும் புகழ்பெற்றது என்.டி.டிவி. அதன் ஆசிரியர் ஸ்ரீனிவாச ஜெயின், கடந்த காலங்களில் பல சந்தர்ப்பங்களில் போலி செய்திகளை வெளியிட்டு மாட்டிக்கொண்டவர். அவ்வகையில், சமீபத்தில் அவரது டுவிட்டர் பக்கத்தில், பாரத் பயோடெக்கில் உள்நாட்டில் உருவாக்கப்பட்ட கொரோனா தடுப்பூசியான கோவாக்சின் பற்றிய ஒரு போலி செய்தியை பதிவிட்டார். அந்த பதிவில், 'கோவாக்சினின் ஆரம்ப தொகுதிகள் சரியான தரத்தில் இல்லை என்று மத்திய அரசின் தடுப்பூசி ஆலோசனை குழுத்தலைவர் டாக்டர் என்.கே அரோரா என்னிடம் தெரிவித்தார்' என பதிவிட்டார். ஸ்ரீனிவாச ஜெயினின் இந்த போலி பதிவிற்கு சமூக ஊடகங்களில் பலத்த எதிர்ப்பு கிளம்பியது. அதன் பிறகு தனது பொய்யை நியாயப்படுத்த ஒரு விளக்கத்தை வெளியிட்டார். அதில், 'டாக்டர் அரோராவின் கூற்றுப்படி, பெங்களூரு ஆலையில் தயாரிக்கப்பட்ட முதல் தொகுதி தரம் சம்பந்தப்பட்ட சில பிரச்சினைகள் காரணமாக அனுப்பப்படவில்லை. புதிய தரமான மருந்துகள் மட்டுமே மக்களுக்கு செலுத்த அனுப்பப்பட்டன என அதற்கு சாக்குபோக்கு சொல்லி மழுப்பியுள்ளார்.

# தேசிய கல்வி உதவித்தொகை




விஜயபாரதம்

தொழில்நுட்பக் கல்வி இயக்குநர், அனைத்து பொறியியல், பாலிடெக்னிக் கல்லூரிகளுக்கு அனுப்பிய சுற்றறிக்கையில், 'நடப்பு கல்வியாண்டுக்கான 'தேசிய கல்வி உதவித்தொகை'க்கான இணையதளம் (என்.எஸ்.பி) விரைவில் திறக்கப்பட உள்ளது. அதில், சிறுபான்மையினர் கல்வி உதவித்தொகை திட்டத்தின்கீழ் பயனாளர்களை தேர்வு செய்வதில் நடக்கும் மோசடிகளைத் தவிர்க்க, மாணவர்களின் சுய விவரங்களை ஆதார் எண்ணுடன் ஒப்பிட்டு, மின்னணு முறையில் சரிபார்க்கும் முறையை மத்திய சிறுபான்மையின நலஅமைச்சகம் அறிமுகம் செய்துள்ளது. எனவே, அனைத்து கல்வி நிறுவனங்களும் எஸ்.சி, எஸ்.டி மாணவர்களின் ஆதார் விவரங்களை கட்டாயம் பதிவேற்றம் செய்ய வேண்டும். பாலிடெக்னிக் கல்லூரிகளின் முதல்வர்கள் இதில் சிறப்பு கவனம் செலுத்தி, மாணவர்களின் ஆதார் விவரங்களை விரைவாக சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்' என தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் சுமார் 62 ஆயிரம் மாணவ மாணவிகள் மத்திய அரசின் தேசிய கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் பயனடைந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.


# ஒலிம்பிக் அற்புதத் தருணங்கள்



விஜயபாரதம்

ஒலிம்பிக்கில் உயரம் தாண்டுதல் போட்டியில் கடந்த ஆகஸ்ட்1ம் தேதி நடந்தது. அதில் கத்தாரின் பார்ஷிம் என்பவரும் இத்தாலியின் டம்பேரி என்பவரும் தங்கத்துக்காக கடுமையாக போராடினார்கள். இருவரும் 2.37 மீட்டர் உயரம் தாண்டினர். எஞ்சியவர்களால் முடியாமல் போனது. அதன்பின் இருவருக்கும், 2.37 மீட்டரைவிட உயரமாக வைத்து இருவரில் ஒருவரை தங்கப் பதக்கத்திற்காக தேர்ந்தெடுக்க முயற்சித்தனர் போட்டியாளர்கள். மூன்று முறை முயற்சித்தும் இருவராலும் தாண்ட முடியவில்லை. இறுதியாக ஒரே ஒரு வாய்ப்பு கொடுக்க, இத்தாலி வீரர் டம்பேரி காலில் அடிபட்ட வலி காரணமாக பின் வாங்குவதாக அறிவித்தார். ஆனால் கத்தார் வீரர் அதன்பின்பு செய்த செயல்தான் அற்புதமானது. அவருக்கு தங்கம் உறுதியாக கிடைக்கும் என்று தெரிந்த பின்னரும் போட்டி நடத்தும் அதிகாரிகளிடம், "நானும் போட்டியில் இருந்து விலகினால் என்ன செய்வீர்கள்?" என்று கேட்க "இருவருக்கும் பதக்கத்தை பகிந்தளிப்போம்" என்று கூறினர். உடனே அவரும் பின்வாங்குவதாக அறிவித்தார். எதிர் வீரரின் திறமையையும் விடாமுயற்சியையும் மதித்து அவரும் பரிசு பெற தகுதியானவரே என்று அங்கீகரித்து சக போட்டியாளரிடம் தன் நட்பை நிருபித்தார் கத்தார் வீரர் பாஷிம். அவர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, இருவருக்கும் தங்கப் பதக்கம் பகிர்ந்தளிக்கப்பட்டது. ஒலிம்பிக் வரலாற்றில் மிக அற்புதமான தருணங்களில் இதுவும் ஒன்று.

---



விஜயபாரதம்

# மூன்றாவது அலை எப்போது ?

ஐதராபாத் ஐ.ஐ.டி, கான்பூர் ஐ.ஐ.டி., யைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர் கணித முறை அடிப்படையில் கொரோனா மூன்றாவது அலையை கணித்துள்ளனர். இரண்டாவது அலை குறித்த இவர்களது கணிப்பு சரியாக இருந்தது குறிப்பிடத்தக்கது. இவர்களின் கூற்றுப்படி, மூன்றாவது அலை அடுத்த சில நாட்களில் துவங்கும். அக்டோபரில் உச்சத்தை அடையும். ஆனாலும் இரண்டாவது அலையைப் போல் மூன்றாவது அலையில் பாதிப்பு, உயிரிழப்புகள் அதிகம் இருக்காது. தினசரி பாதிப்பு அதிகபட்சமாக 1.50 லட்சத்துக்குள் தான் இருக்கும். மூன்றாவது அலை பாதிப்பை தடுப்பதில் தடுப்பூசிக்கு முக்கிய பங்கு உள்ளது. அதனால், தடுப்பூசி போடும் பணியை விரைவுபடுத்தினால் மூன்றாவது அலை பாதிப்பை நிச்சயம் குறைக்க முடியும்' என அவர்களின் ஆய்வு முடிவு தெரிவிக்கிறது. எனவே, மக்கள் உடனடியாக தடுப்பூசி போட்டுக்கொள்வது, முகக்கவசம் அணிவது, கிருமி நாசினி, சோப் கொண்டு கைகளை அடிக்கடி சுத்தம் செய்தல், கூட்டம் கூடுவதை தவிர்த்தல் உள்ளிட்ட கொரோனா தடுப்பு நடைமுறைகளை முழுமையாக பின்பற்றி மூன்றாவது அலை ஏற்படாமல், ஏற்பட்டாலும் அதில் சிக்கிக்கொள்ளாமல் தங்களை காத்துக்கொள்ள வேண்டும்.


# பலாத்கார பாதிரி மனு தள்ளுபடி



விஜயபாரதம்

கேரளாவின் கொட்டியூரில் ஒரு கிறிஸ்தவ தேவாலயத்தில் பாதிரியாக பணியற்றியவர் ராபின் வடக்கம்சேரி. சில ஆண்டுகளுக்கு முன் அங்கு பணிபுரிந்து வந்த ஒரு மைனர் சிறுமியை பலாத்காரம் செய்துள்ளார். இதனால் அந்த சிறுமி ஒரு குழந்தையை பெற்றெடுத்தார். இதுகுறித்த புகாரில் பாதிரியை காவல்துறை கைது செய்தது. அவர் பணி நீக்கம் செய்யப்பட்டார். கேரள நீதிமன்றம் பாதிரிக்கு 20 ஆண்டு சிறை தண்டனை விதித்தது. அவரது மேல்முறையீட்டு மனு விசாரணையில் உள்ளது. அந்த பெண் தற்போது மேஜர் ஆகிவிட்டதால் அவரை மணக்க தனக்கு ஜாமீன் கேட்டு பாதிரி தாக்கல் செய்த மனுவை உயர் நீதிமன்றம் நிராகரித்தது. இதேபோல அந்த பெண்ணும் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். உயர் நீதிமன்ற உத்தரவில் நாங்கள் தலையிடமுடியாது என கூறி உச்ச நீதிமன்றம் மனுவை தள்ளுபடி செய்தது.

# மமதாவின் கேலா ஹோப்



விஜயபாரதம்

மேற்கு வங்க முதல்வரும் திருணமூல் கட்சித் தலைவருமான மமதா பேனர்ஜி, அம்மாநிலத்தில் விளையாட்டுத்துறையை ஊக்குவிக்க ‘விளையாட்டு துவங்கட்டும்’ என பொருள்படும் ‘கேலா ஹோப்’ என்ற நிகழ்ச்சியை துவக்கிவைத்தார். அந்நிகழ்ச்சியின்போது மேடையில் அவர் கால்பந்தை கைகளால் தட்டி, தூக்கிப் போட்டு விளையாடினார். பந்துகளை மக்களிடம் வீசி எறிந்தார்.

இது போன்ற அவரது கோமாளித்தனங்கள்தான் தற்போது நெட்டிசன்களுக்கு நல்ல பொழுதுபோக்கு. மமதா பேனர்ஜி, கால்பந்து வீரர் ரொனால்டோவிற்கு அச்சுறுத்தலாக இருக்கலாம் என ஒரு டுவிட்டர் பயனாளி பதிவிட்டார். மற்றொருவர், அவர் ஒரு பன்முகத்தன்மைக் கொண்டவர். மமதாவுக்கு பல மொழிகள் தெரியும், அவர் ஒரு ஐ.டி நிபுணர், தற்போது ஒரு சிறந்த விளையாட்டு வீரர், நல்ல நடிகர் என கிண்டலடித்தார். உலக கால்பந்து அமைப்பான பிபா, இனி அடுத்த போட்டிகளில், மக்களின் மீது பந்து எறியும் திறமையை வைத்தே வீரர்களை ஏலம் எடுக்கும் என்றார் மற்றொரு சமூக ஊடக பயனாளி. இப்படி, சமூக வலைத்தளங்களில் மமதா குறித்த கிண்டல்கள்தான் இப்போது அங்கு டிரெண்டிங்.


# முன்னாள் அமைச்சர் மீது வழக்கு பதிவு



விஜயபாரதம்

உத்தர பிரதேசத்தில் மாயாவதி தலைமையிலான பகுஜன் சமாஜ் ஆட்சியின்போது, அமைச்சராக இருந்தவர் சௌத்ரி பஷீர். இவர் மீது பல்வேறு குற்ற வழக்குகள் நிலுவையில் உள்ளன. சவுத்ரி பஷீரின் மூன்றாவது மனைவி நக்மா, சமீபத்தில் சமூக வலைதளத்தில் 'வீடியோ' ஒன்றை வெளியிட்டார். அதில், 'சௌத்ரி பஷீருக்கு நாங்கள் ஐந்து பேர் மனைவியர் உள்ளோம். தற்போது, ஷயிஸ்டா என்ற பெண்ணை ஆறாவது திருமணம் செய்ய உள்ளார். இது குறித்து அவரிடம் கேட்டபோது, என்னை அடித்து துன்புறுத்தினார். முத்தலாக் கூறி வீட்டை விட்டு துரத்தினார். அவரை திருமணம் செய்தது முதலே உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் என்னை துன்புறுத்தி வந்தார். பெண்களை துன்புறுத்துவதில் விருப்பம் உடையவர் அவர்' என்று கூறினார். இதையடுத்து முஸ்லிம் பெண்கள் திருமண பாதுகாப்பு சட்டத்தின் கீழ், சௌத்ரி பஷீர் மீது, உ.பி காவல்துறை வழக்கு பதிவு செய்துள்ளனர்.

# தடுப்பூசிக் குழு மீது தாக்குதல்






விஜயபாரதம்

கடந்த ஆண்டு நைஜீரியா போலியோ இல்லாத நாடாக அறிவிக்கப்பட்டது. ஆனால், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தானில் மட்டுமே போலியோ நோய் தொடர்ந்து கொண்டுள்ளது. இங்குள்ள அடிப்படைவாதிகள், போலியோ சொட்டு மருந்து போடுவதை விரும்புவதில்லை. ஏனெனில், இது குழந்தைகளுக்கு கருத்தடை செய்யும் மேற்கத்திய நாடுகளின் சதி' என்று அவர்கள் இன்னமும் நம்புகின்றனர். அவ்வகையில், பாகிஸ்தானில் அல்கொய்தா பயங்கரவாதத் தலைவன் ஒசாமா பின்லேடன் பதுங்கியிருந்த அபோட்டாபாத், தேரா இஸ்மாயில் கான் மாவட்டம், பெஷாவர் ஆகிய மூன்று மாவட்டங்களில் கடந்த இரண்டு நாட்களில் போலியோ மருந்து செலுத்தும் குழுவினர் மீது மூன்று தாக்குதல்கள் நடைபெற்றன. அதில், பாதுகாப்புக்கு வந்த இரண்டு காவல் அதிகாரிகள் கொல்லப்பட்டனர். இதேபோல, இந்த ஆண்டு ஜூன் மாதத்தில், போலியோ சொட்டு மருந்து போட வந்த சுகாதார பணியாளர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் கைபர் பக்துன்க்வா மாவட்டத்தில் இரண்டு காவலர்களும் ஸ்வாபியில் இரண்டு மருத்துவ ஊழியர்களும் கொல்லப்பட்டனர். இதனால், போலியோ சொட்டு மருந்து திட்டத்தை காலவரையின்றி பாகிஸ்தான் நிறுத்தியது குறிப்பிடத்தக்கது.

# சீன கொரோனா அமெரிக்கா புகார்




விஜயபாரதம்

அமெரிக்க குடியரசு கட்சியின் நாடாளுமன்ற வெளியுறவுக் குழு பிரதிநிதி மைக் மெக்கால் கொரோனா குறித்த ஆய்வறிக்கை ஒன்றை வெளியிட்டார். அதில், 'கொரோனா வைரஸ் சீனாவின் வூஹான் வைரஸ் ஆய்வுக் கூடத்தின் விஞ்ஞானிகளால்தான் உருவாக்கப்பட்டது. அங்கிருந்துதான் கசிந்தது. வூஹான் விலங்குகள் சந்தையில் இருந்து பரவவில்லை. மனிதரை தாக்கும் வகையில் கொரோனா வைரசை உருவாக்கவும், வெளியில் யாருக்கும் தெரியாமல் மறைக்கவும் பல முயற்சிகள் நடந்துள்ளன. இதற்கு பல்வேறு ஆதாரங்கள், சாட்சியங்கள் கிடைத்துள்ளன. 2019ல் வூஹான் ஆய்வகத்தில் அபாயகரமான கழிவுகளை பராமரிக்கும் பிரிவை சீரமைக்க 11 கோடி ரூபாய் நிதி சீன அரசிடம் கோரப்பட்டுள்ளது. ஆய்வகம் செயல்படத் துவங்கி இரண்டு ஆண்டுகள்கூட முடிவடையாத நிலையில், அபாயகரமான கழிவுகளைக் கையாளும் வசதி தேவை என்ற கோரிக்கை கொரோனா வைரஸ் அங்கிருந்து கசிந்திருக்கலாம் என்ற சந்தேகத்திற்கு வலு சேர்த்துள்ளது. இதைத்தவிர மேலும் பல ஆதாரங்கள் உள்ளன' என அந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

# அல்கொய்தா சதித்திட்டம்



விஜயபாரதம்

அல்கொய்தாவின் இன்ஸ்பையர் பத்திரிகையில் வெளியாகியுள்ள ஒரு கட்டுரையில், அமெரிக்காவில் பயங்கரவாத தாக்குதல்களை மேற்கொள்ள ‘லோன் வுல்ப்’ எனப்படும் தனி நபர் ஜிஹாதி பயங்கரவாத தாக்குதல்களை தொடுக்க அழைப்பு விடுத்துள்ளது. கிறிஸ்தவ, யூத, நாத்திக காவல்துறை அதிகாரிகளை கார் ஏற்றி கொல்வது, சுட்டுக்கொல்வது, வன்முறை போராட்டங்களை நடத்தி திசைதிருப்பி கொல்வது போன்றவற்றை செய்யும் பயங்கரவாதிகளுக்கு 60 ஆயிரம் அமெரிக்க டாலர் மதிப்பிலான பிட்காயின் பரிசுத்தொகையும் அறிவித்துள்ளது. இந்த ஆண்டு மார்ச் மாதத்தில் கொலராடோவில் உள்ள மளிகைக் கடையில் பத்து பேரை கொன்றதாக குற்றம் சாட்டப்பட்ட சிரியாவைச் சேர்ந்த அஹ்மத் அல்இசா என்ற அமெரிக்கரை அல்கொய்தா பாராட்டியுள்ளது. மேற்கத்திய நாடுகள் மட்டுமல்லாது உலக அளவிலான தாக்குதலையும் ஊக்குவித்துள்ளது. எனினும், ‘பயங்கரவாதத்தை எதிர்ப்பதில் அமெரிக்காவின் தொடர் முயற்சிகள் காரணமாக அல்கொய்தாவின் திறன்கள் கடுமையாக சீரழிந்துவிட்டன’ என பயங்கரவாத எதிர்ப்புக்குழு நிபுணர்களின் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

# ஏமன் போரில் குழந்தைகள்



விஜயபாரதம்

தென்மேற்கு ஆசிய நாடான ஏமன் நாட்டில், சன்னி பிரிவைச் சேர்ந்த அதிபர் மன்சூர் ஹைதிக்கும், ஷியா பிரிவைச் சேர்ந்த ஹவுத்தி கிளர்ச்சிப் படைக்கும் இடையே கடந்த 2015ம் ஆண்டு முதல் உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது. அதிபர் ஆதரவாக சௌதி அரேபியாவும் ஹவுத்தி கிளர்ச்சிப் படைக்கு ஈரானும் ஆதரவு அளிக்கிறது. இந்த போரால் இதுவரை 1 லட்சத்துக்கும் அதிகமானவர்கள் பலியாகியுள்ளனர். லட்சக்கணக்கானோர் பஞ்சத்துக்கு தள்ளப்பட்டுள்ளனர். இந்நிலையில், 'ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் போரில் குழந்தைகளை பயன்படுத்துகின்றனர். ஈரானின் லட்சியங்களுக்கு சேவை செய்வதற்காக தங்கள் போர்களுக்கு குழந்தைகளின் கல்வி, விளையாட்டு மற்றும் அவர்களின் உரிமைகளை ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் பலி கொடுக்கின்றனர்' என, ஏமன் நாட்டின் தகவல்துறை அமைச்சர் அல் இர்யானி குற்றம் சாட்டியுள்ளார். அங்கு போர் தொடங்கியது முதல் சுமார் 18 ஆயிரத்துக்கும் அதிகமான குழந்தைகளை கிளர்ச்சியாளர்கள் வலுகட்டாயமாக போரில் ஈடுபடுத்தி இருப்பதாக மனித உரிமை அமைப்புகளும் தெரிவித்துள்ளன.

---



விஜயபாரதம்

# தேவையற்றதை நீக்கினால் . . .

ஓர் அற்புதமான சிற்பி, ஒருநாள் தெருவில் போய் கொண்டிருந்தவர் ஒரு கடையருகே கனத்த பாறாங்கல் ஒன்றைப் பார்த்தார். ஏதோ பெரிய புதையலைப் பார்த்த மகிழ்ச்சி.

அந்தக் கடைக்காரரிடம் சென்று, 'ஐயா, இந்தப் பாறாங்கல் தங்களுக்குத் தேவையா அல்லது இதை நான் எடுத்துச் செல்லலாமா?' என்று கேட்டார்.

'தாராளமாய் எடுத்துச் செல்லுங்கள். இது இந்த இடத்தில் பெரிய இடையூறாய்க் கிடக்கிறது. போவோர் வருவோரெல்லாம் இடறி விழுகின்றனர்!' என்றார் கடைக்காரர்.

பாறாங்கல்லை உருட்டிச் சென்ற அந்த சிற்பி, அதை நுட்பமாகச் செதுக்கி அற்புதமான கடவுள் சிலை ஒன்றை உருவாக்கினார். அந்தச் சிலை கடைத்தெருவில் விலைக்கு வந்தது. போட்டி போட்டுக் கொண்டு மக்கள் அதை விலைக்குக் கேட்டனர்.

அப்படிக் கேட்டவர்களுள் கல்லைக் கொடுத்த கடைக்காரரும் ஒருவர். முடிவில் அந்தக் கடைக்காரரே அதிக விலை கொடுத்து அந்தச் சிலையைப் பெற்றுக் கொண்டார். அந்த சிற்பியை மறந்துவிட்ட அந்தக் கடைக்காரர், 'இந்த அற்புதமான சிலைக்குரிய கல்லை எந்த மலையிலிருந்து எடுத்து வந்தீர்கள்?'... என்று கேட்டார்.

அதற்கு சிற்பி, 'வேறு எங்கிருந்தும் இல்லை. தங்கள் கடை வாசலில்தான் இதைக் கண்டெடுத்தேன். என்னை நினைவில்லையா தங்களுக்கு? ஆறு மாதங்களுக்கு முன் இடையூறாய்க் கிடக்கிறது என்று சொல்லி என்னிடம் நீங்கள் கொடுத்த கல்தான் இது என்றார். கடைக்காரர் வியந்தார்.

'ஆம், தங்கள் பார்வையில் இது தடைக் கல்லாய்த் தெரிந்தது. என் பார்வையில் கடவுளை பொதிந்து வைத்திருக்கும் சிற்பக் கல்லாய்த் தெரிந்தது. வேண்டாத பகுதியையெல்லாம் செதுக்கி எடுத்தேன். உள்ளே இருந்த கடவுளின் உருவம் வெளிப்பட்டது!' என்றார்.

தேவையற்ற வார்த்தைகளை வாழ்வில் நீக்கினால் நாமும் விலைமதிப்பற்ற மனிதனாய், அனைவரும் நம்மை போற்றும் வகையில் வாழ்ந்து காண்பிக்கலாம்.

# வலையில் சிக்கிய மீம்கள்







சொன்னீர்களே செய்தீர்களா?
பெட்ரோல் & டீசல் விலை குறைப்பு
சொன்னீர்களே செய்தீர்களா?
கல்வி கடன் ரத்து
சொன்னீர்களே செய்தீர்களா?
நீட் தேர்வு ரத்து
சொன்னீர்களே செய்தீர்களா?
நகை கடன் ரத்து


100 கிரவுண்டுல சொந்த வீடு கட்டினாலும்...
ரோட்ல நாலு அடி இழுத்துப்போட்டா தான் நிம்மதியா இருக்கும்...



கூவத்து பக்கம் என்ன
ப்ரச்சனை தன்ராஜ்

செங்கல்பட்டுல இருத்து கூவத்து
பக்கம் குடி வந்தா இடிப்பானுகலாம்...
ஆனா பர்மா,
பங்களாதேஷ்,பாக்கிஸ்தான்ல இருந்து
திருட்டு தனமா
உள்ள
வந்தவனுக்கு
குடியுரிமை
குடுக்கனுமாம்..
சரண்யா






திருச்சியில் ஆடி 18க்கு காவிரியில்
வழிபாடு நடத்த அனுமதியில்லை.
அம்மா மண்டபம் அருகில் உள்ள
சர்ச்சுக்கு விசேஷ அனுமதி.இதை
கண்டித்து அம்மா மண்டபத்தில்
பாஜ கட்சியினர் சாலை மறியல்.

TRICHY VISION
www.trichyvision.com